**நகர செயற்திட்ட தயார்ப்படுத்தல் வசதி (US$ 5.74 Mn) - 2021**

நகர செயற்திட்ட தயார்ப்படுத்தல் வசதியின் 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் (ஏடிபீ) இடையில் கைச்சாத்திடப்பட்ட 2019 சனவரி 17 ஆம் திகதிய 3706 எஸ்ஆர்ஜ (சீஓஎல்) ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் ஐஈ ஆம் உறுப்புரையின் 4.02 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி**

செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் மற்றும் அமுல்படுத்தல் முகவராக உள்ளது. முன்னுரிமை நகர செயற்திட்டங்களிற்காக உயர் மட்ட தயார்நிலையை செயற்படுத்துவதே செயற்திட்டத்தின் நோக்கமாகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம் செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக்கிரயம் ரூபா 1,090.98 மில்லியனுக்க சமனான ஐ.அ.டொலர் 5.74 மில்லியனாக இருந்நதுடன் இதில் ரூபா 883.38 மில்லியனுக்கு சமனான ஐ.அ.டொலர் 4.65 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2019 மார்ச் 06 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2022 மார்ச் 31 இல் பூர்த்தி செய்யப்பட வேண்டும் என பட்டியலிட்டிருந்தது.

**1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

எனது அறிக்கையின் 2.1 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களை தவிர்த்து செயற்திட்டத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

**1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| இல | கணக்கீட்டுக் குறைபாடுகள் | தொகை ரூபா மில்லியன் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | எல்கேஏஎஸ் 37 இன் 86 ஆம் பந்தியின் படி, நிதிக்கூற்றுக்களில் நிகழத்தக்க பொறுப்புக்கள் வெளிப்படுத்தப்படல் வேண்டும். எனினும், 03 பிரதான ஆலோசனை நிறுவனங்களினால் சமர்ப்பிக்கப்பட்ட சாத்தியமான நிகழத்த்தக்க பொறுப்புக்களின் இறுதி ஒப்பந்த பட்டியல் ரூபா 61.3 மில்லியன் தொகைக்கு சமனான ஐ.அ.டொலர் 26,000 மற்றும் யூரோ 41,206 தொகை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 61.3 | ஏற்றுக்கொள்ளப்பட்டது.. ஆலோசனைக் கொடுப்பனவு மற்றும் கோரிக்கைக்கான அனைத்து நிலுவைத்தொகைகளை செலுத்திய பிறகு எவ்வித இறுதி அங்கீகாரத்தையும் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறாக வழங்கவில்லை. இதனால், நாங்கள் எவ்வித ஏற்பாடும் செய்யவில்லை. | எல்கேஏஎஸ் 37 இன் படி நிகழத்தக்க பொறுப்புக்கள் வெளிப்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | 04 நகரங்களில் உருவாக்கப்பட்ட உப அலுவலகங்களின் பாவனைக்காக கொள்வனவு செய்யப்பட்ட ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் சம்பந்தப்பட்ட நகர சபைகளுக்கு 2020 திசெம்பர் 31 இல் உள்ளபடியாக கையளிக்கப்பட்டது.. எனினும், ஆண்டு இறுதியில் மீளாய்வின் கீழ் அச்சொத்துக்களின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் இருந்து மாற்றப்பட்டிருக்கவில்லை. | 7.3 | நிதி உடன்படிக்கையின் படி செயற்திட்டம் 2021.்.12.்.31 இல் உள்ளபடியாக முடிக்கப்படவில்லை என்பதுடன் செயற்திட்டத்தின முடிவு வரை இச்சொத்துக்களை நாங்கள் பேண வேண்டியுள்ளது. (தற்போது அரசாங்கம் செயற்திட்ட காலப்பகுதியை 2024.்.12.்.31 வரை நீடித்துள்ளது) | அந்த ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் பெறுமதி செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களில் இருந்து நீக்கப்பட வேண்டும். |

### 2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| இல. | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் எவ்ஆர் 225 (1) | அனைத்து கொடுப்பனவுகளும் உறுதிச்சீட்டுக்கள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டு சரியாகவும் முழுமையாகவும் பரிந்துரைக்கப்பட்ட படிவத்தில் தயாரிக்கப்படல் வேண்டும். எனினும், 09 உறுதிச்சீட்டுக்களில் ரூபா 409,055 தொகைக்கு | ஏற்றுக்கொள்ளப்பட்டது. | நிதிப் பிரமாணங்கள் கடைப்பிடிக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | திகதியிடப்படவில்லையும் 13 உறுதிச்சீட்டுக்களில் ரூபா 1.3 மில்லியன் தொகைக்கு பெறுனரின் கையொப்பத்தை பெற்றிருக்கவில்லை. | | |
| (ஆ) | எவ்ஆர் 757 | பிஎம்யு இன் பொருள் கணக்கெடுப்பு செயற்திட்டத்தினால் நடாத்தப்படவில்லை. | பொருள் கணக்கெடுப்பு செய்யப்பட்டு 2022 பெப்ரவரியில் கணக்கிடப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணங்கள் கடைப்பிடிக்கப்பட வேண்டும். |

**3. பௌதீக செயலாற்றல்**

**3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக செயன்முன்னேற்றம்**

| இல | கூறு | செயற்பாடு | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான எதிர்பார்க்கப்பட்ட பௌதீக செயலாற்றல் | அடையப்பெற்ற செயலாற்றல் | கணக்காய்வு விடயம் |
|---|---|---|---|---|---|
| | | | சதவீதம் | சதவீதம் | |
| (அ) | அபிவருத்திக் கிரயம் | ஆலோசனை | 100 | 50 | ஆலோசனை அறிக்கையானது 2020 ஒக்டோபர் வரை சமர்ப்பிக்கப்படவில்லை. எனினும், தாமதக்கட்டணஙகள் எதுவும் மீட்கப்படவில்லை. |
| (ஆ) | அபிவருத்திக் கிரயம் | ஆலோசனை | 100 | - | 21 ஆலோசனை அறிக்கைகளானது செயற்திட்டத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தும் அவ்வறிக்கைகளானது செயற்திட்டத்தினால் 06 தொடக்கம் 24 மாதங்கள் காலம் கடந்த பிறகும் கூட 2022 ஜுன் வரைக்கும் மீளாய்வு செய்யப்படவில்லை. ஆலோசனை அறிக்கையை மீளாய்வு செய்வதற்கு பொருத்தமான திட்டத்தின் குறைபபடு தாமதத்திற்கான பிரதான காரணமாக இருந்தது. |

**முகாமைத்துவத்தின் பதில்கள்**

(அ) உடன்படிக்கையின் நிபந்தனைகளின் பிரகாரம் நாங்கள் ஆலோசனையாளர்களிடமிருந்து தாமத கட்டணங்களை அறவிட முடியாது.

(ஆ) ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**கணக்காய்வாளரின் பரிந்துரைகள்**

செயற்திட்ட நடவடிக்கைகளை பூர்த்தி செய்வதன் ஊடாக செயற்திட்ட குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்கு விவேகமானதும் வினைத்திறனுமான ஆலோசனை முகாமைத்துவ முறைமை அமுல்படுத்தப்பட வேண்டும்.

**3.2 பயன்படுத்தப்படாத நிதிகளின் விடயங்கள்**

| இல | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
| --- | --- | --- | --- |
| (அ) | கிடைக்கப்பெற்ற தகவலின் பிரகாரம் சிபிஎஸ்எல் இல் பேணப்படும் சிறப்பு (டொலர்) கணக்கிற்கு பெறப்பட்ட ரூபா 133.9 மில்லியனுக்கு சமனான ஐ.அ.டொலர் 0.679 மில்லியன் மொத்த நிதியில் ஆண்டுக்கான மீளாய்வின் போது மொத்தம் ரூபா 144.52 மில்லியனுக்கு சமனான ஐ.அ.டொலர் 0.737 மில்லியன் பயன்படுத்தப்பட்டுள்ளது. மேலும், மீளாய்வின் கீழ் வருட இறுதியில் சிறப்பு (டொலர்) கணக்கில் மொத்தம் ரூபா 4.32 மில்லியனுக்கு சமனான ஐ.அ.டொலர் 21,574 மீதமிருந்தது. | ஏற்றுக்கொள்ளப்பட்டது | செயற்திட்டத்தின் அமுலாக்கல் திட்டத்திற்கான சரியான நடவடிக்கைகள் எடுப்பதற்கு கட்டுப்பாட்டு முறைமை அமுல்படுத்தப்படல் வேண்டும் என்பதுடன் விலகல்கள் சரியான நேரத்தில் பொறுப்பான பணியாளர்களுக்கு அறிக்கையிடப்பட வேண்டும். |
| (ஆ) | ஆண்டுக்கான மீளாய்வின் கீழ் வருடாந்த பாதீடு ஊடாக மொத்தம் ரூபா 540 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதுடன் இதில் ஆண்டுக்கான மீளாய்வின் போது ரூபா 174.79 மில்லியன் மாத்திரம் பயன்படுத்தப்பட்டுள்ளது.<br>ஒதுக்கிடப்பட்ட நிதியுடன் ஒப்பிடும் போது ஆண்டுக்கான மீளாய்வின் கீழ் நிதிப் பயன்பாடு 32 சதவீதமாக இருந்தது. | ஏற்றுக்கொள்ளப்பட்டது. அந்நேரத்தில் பாதீட்டு ஒதுக்கீடுகள் வேண்டுதல்கள்களின் போது ஆலோசனை சேவையை மூடுவதற்கான எண்ணம் இருக்கவில்லை என்பது பிரதான காரணமாகும். அதன் விளைவாக, எதிர்பார்க்கப்பட்ட செலவினம் ஏற்படவில்லை. | நிதிப்பயன்பாட்டை வினைத்திறனாக மேற்கொள்வதற்கு நிதிப் பயன்பாட்டு திட்டம் செயல்நடவடிக்கை திட்டத்துடன் ஒருங்கிணைக்கப்பட வேண்டும். |
| (இ) | மேற்குறிப்பிட்ட தகவலின் பிரகாரம் கடன் வழங்கும் முகவரால் வழங்கப்பட்ட ரூபா 1064.79 மில்லியனுக்கு சமனான ஐ.அ.டொலர் 5.27 மில்லியன் மொத்த ஒதுக்கீட்டில் 38 சதவீதம் பிரதிபலிக்கும் மொத்தம் ரூபா 406.27 மில்லியனுக்கு சமனான ஐ.அ.டொலர் 2.07 மில்லியன் செயற்திட்ட நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து 33 மாதங்கள் கடந்த பிறகு 2021 திசெம்பர் 31 இல் அளவில் பயன்படுத்தப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்ளப்பட்டது. கொவிட் விடயங்கள் தொடர்பின் காரணமாக 2020 இன் நடுப்பகுதியில் தொழிற்பாடுகளை மூடுவதற்கு திறைசேறி திணைக்களத்தினால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களினால் செலவினம் மற்றும் செயலாற்றல் அடையப்பெறாமைக்கான பிரதான காரணமாக இருந்தது. | செயற்திட்டத்தின் அமுலாக்கல் திட்டத்திற்கான சரியான நடவடிக்கைகள் எடுப்பதற்கு கட்டுப்பாட்டு முறைமை அமுல்படுத்தப்படல் வேண்டும் என்பதுடன் விலகல்கள் சரியான நேரத்தில் பொறுப்பான பணியாளர்களுக்கு அறிக்கையிடப்பட வேண்டும். |

**3.3 சர்ச்சைத் தன்மையான விடயங்கள்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 18 ஆம் திகதிய நுசு.்.யுடீ.்.ருளு.்.01 (எழட-ை) ஆம் இலக்க வெளி வளங்கள் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் படி, 03 செயற்திட்டங்கள் 2020 ஒக்டோபர் 12 ஆம் திகதியிலிருந்து இடைநிறுத்தப்பட்டன. அந்நேரத்தில் இச்செயற்திட்டத்தின் மீது செலவளித்த ரூபா. 413.36 மில்லியன் தொகை பற்றிய விசாரணைக்கு பதிலளிக்கையில், அச்செயற்திட்டங்கள் மீள்செயற்படுத்தப்பட்டுள்ளன எனவும் அவ்வேலைகளை பயன்படுத்தி புதிய திட்டம் அமுல்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும், அச்செயற்திட்டங்கள் 2022 யூன் 20 வரை அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. இதனால் மேற்குறிப்பிட்ட செலவினங்கள் பயனற்றதாகியது. | செயற்திட்டம் மீள்செயற்படுத்தப்பட்டதிலிருந்து முன்னைய ஆலோசகரினால் ஏற்கனவே செய்யப்பட்ட பணிகளை பயன்படுத்தி புதிய திட்டத்துடன் தொடர தீர்மானிக்கப்பட்டது. | துணை செயற்திட்டத்தை விரைவாக அமுல்படுத்துவதற்கு சரியான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |